தேதி.27.09.2024

<u>சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்</u>

**MCOP**.**No**.408/2019 திருமதி. வைத்தீஸ்வரி ம.சா. 1

<u>ம.சா.1: சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

விபத்தில் இறந்தவர்கள் எனது கணவர் மற்றும் குழந்தை என்றால் சரிதான். இருசக்கர வாகனம் ஒட்டுவதற்கு எனது கணவருக்கு ஒட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான். விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். கேள்விப்பட்டுத்தான் தெரியும் என்றால் சரிதான். எனது கணவர் எந்த திசையில் வந்தார் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சென்றார் என்றால் சரிதான். மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி இடதுபுறம் ஓரமாக மெதுவாகத்தான் வந்தார் என்றால் சரியல்ல. மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வேகமாக வந்தாரா என்றால் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்தார். எனது கணவர் வந்த வாகனத்திற்கு பின்னால் வந்த இருசக்கர வாகனம் மோதி தான் விபத்து ஏற்படுத்தியது என்றால் சரிதான். மேற்படி விபத்தில் எனது கணவரும், குழந்தையும் அதே இடத்தில் கீழே விழுந்துவிட்டார்கள் என்றால் சரிதான். சாலையில் டிவைடர் உள்ளது என்றால் விபத்து நடந்த இடத்தில் இல்லை. முன்பாக தான் உள்ளது. எனது கணவர் ஹெல்மெட் அணியவில்லை என்றால் அணிந்திருந்தார். பொதுவாக இருசக்கர வாகனத்தில் போகும்போது இடபுறம் மெதுவாகத்தான் போக வேண்டும் என்றால் சரிதான். வெள்ளைக்கோட்டிற்கு உள்புறம் பெரிய கனரக வாகனங்கள் செல்லவேண்டும் என்றால் சரிதான். பின்னால் வந்த இருசக்கர வாகனம் எனது கணவர் சென்ற வாகனத்திற்கு பின்னால் பம்பரில் மோதி தான் விபத்து ஏற்பட்டு இறந்துவிட்டார் என்றால் சரிதான். எனது குழந்தையும் விபத்து ஏற்பட்டு ரோட்டின் மையப்பகுதியில் விழுந்ததால் 3ம்

எதிர்மனுதாரருக்கும் விபத்திற்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனது கணவர் ஓட்டி வந்த வாகனத்திற்கு பாலிசி உள்ளதா என்றால் எனக்கு தெரியாது. வேன் மோதியது என்பற்கு மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில் Damage இருப்பதாக குறிப்பிடவில்லை என்றால் வேன் என் கணவரின் நெஞ்சு மீது ஏறியது. விபத்திற்கு முழு காரணம் பின்னால் வந்த இருசக்கர வாகனம் தான் என்றும், வேன் காரணம் இல்லை என்று சொன்னால் இருசக்கர வாகனம் சைடில் இடித்து கீழே விழுந்த போது என் கணவரின் நெஞ்சு மீது வேன் ஏறியது. விபத்திற்கு வேன் ஓட்டுநர் காரணம் இல்லை என்றும், இருசக்கர வாகனத்தின் ஓட்டுநர் தான் காரணம் என்றும் அதே சாலையில் தான் விபத்து ஏற்பட்டு விழுந்தார் என்று சொன்னால் கோபி வரும் ரோட்டில்விழுந்து எனது கணவரின் மீது வேன் ஏறியது. எனது பிரமாண பத்திரிக்கையில் அதே சாலையில் அதே பகுதியில் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. போலீசார் சரியாக விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனக்கு நஷ்ட ஈடு 1, 2ம் எதிர்மனுதாரர்கள் தான் தரவேண்டும் என்றும், 3, 4ம் எதிர்மனுதாரர்கள் நஷ்ட ஈடு செலுத்த வேண்டியதில்லை என்று சொன்னால் சரியல்ல.

4ம் எதிர்மனுதாரர் மேற்கண்ட குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்.

<u>**மறுவிசாரணை இல்லை**</u>

திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.

சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம், நாள்.27.09.2024

**சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்**

**MCOP.No**.408/2019

2024-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27-ஆம் நாள் **ம.சா.2** சாட்சி **திரு.சிவக்குமார்** என் முன் சாட்சியாக விசாரிக்கப்படுபவர். 1969ம் ஆண்டு 24வது சட்டப்பிரிவு 4(1) ஏற்பாட்டின்படி **உயர்திரு.என்.ஷர்மிளா, பி.ஏ., பி.எல்.,** சார்பு நீதிபதி, சத்தியமங்கலம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | **திரு.சிவக்குமார்** | வயது : | |
| த/பெ : | | சாதி : | |
| கிராமம் : | | சமயம் : | |
| தாலுக்கா : | | தொழில் : | |

**ம.சா.2 : முதல் விசாரணை:**

நான் இவ்வழக்கில் சாட்சி ஆவேன். என் தரப்பில் சாட்சியமாக விசாரணை செய்ய பிரமாணவாக்குமூல பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி பிரமாணப்பத்திரிக்கையில் கண்டுள்ள சங்கதிகளை அறிவேன். எனது நிரூபண வாக்குமூலத்தை முதல் விசாரணையாக ஏற்ககோருகிறேன்.

**ஆவணங்கள் குறியீடு இல்லை.**

சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம், நாள்.27.09.2024

**3ம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.

சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம், நாள்.27.09.2024